தெரியவில்லை : பேக்வேர்டு கிளாஸ் என்பது யார் ? அந்தக் காலத்திலே நாடார்கள் இருந்தார்கள், அதற்கப்புறம் தேவர்கள் இருந்தார்கள், அப்புறம் கள்ளர்கள், எங்கள் ஊரிலே அம்பலக்காரர்கள் இருந்தார்கள், இங்கே வந்தால் படையாச்சி என்று இருக்கிறார்கள். அப்புறம் கூலி வேலை செய்கிறவர்கள் வண்ணார் இவர்கள் எல்லாம் பேக்வேர்ட்டு கிளாஸ் என்கிறார்கள். இப்போது எல்லாமே பேக்வேர்டு கிளாஸ், எதிலும் பேக்வேர்டு கிளாஸ்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஐயா என்னைப் பார்த்துப் பேசுங்கள் ஐயா (சிரிப்பு), போகிற போக்கைப் பார்த்தால் அங்கேயே இசைவு கேட்டு பேசுவீர்கள் போல் இருக்கிறது.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : எதற்காக சொல்லுகிறேன் என்றால், தானும் கெட்டு சந்திர புஷ்கரணியையும் சேர்த்து கெடுப்பது போல் ஆகிவிடக் கூடாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அங்கே முன்னாலே இருந்து யாராவது தூண்டி விடுகிறார்களா ஐயா ? (சிரிப்பு).

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : இல்லை அப்படி ஒன்றும் கிடையாது. அதற்கப்புறம்.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்னுமா அப்புறம். மாலையிலே வேறு இருக்கிறது. இது துணை நிதி நிலை அறிக்கை ஐயா. இதை முடித்து விட்டு மாலையிலே ஆளுநர் உரையிலே பேசும்போது வேண்டுமானால் அத்தனையும் பேசலாம். இவ்வளவு தூரம் சொல்லியும் விளங்கிக் கொள்ள மாட்டேன் என்கிறீர்களே.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : எங்களுக்கெல்லாம் கலக்குகிறது சார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எங்களுக்கெல்லாம் நெஞ்சே கலங்குகிறது ஐயா.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : உங்களுக்கெல்லாம் கலக்காது. சபாநாயகருக்கு எதிராக ஒன்றும் இருக்கப்படாது என்று இருக்கிறது.....(சிரிப்பு).

*மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துணை நிதி நிலை அறிக்கை விவாதத்தைப் பொதுவான விவாதம் என்று எடுத்துக் கொள்ளக் கூடாது. கேட்கப்பட்டிருக்கிற நிதி கொடுக்கப்படுவதைப் பற்றிய கருத்துக்களைப் பேசினால்தான் பொருத்தமாக இருக்கும். மாலையில் ஆளுநர் உரையில் தாங்களே உரையாற்றுகிறபோது தங்களுடைய இத்தகைய எண்ணங்களை வெளியிடலாம்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : எனக்கு 5 அல்லது 10 நிமிடம் கொடுங்கள். நிறையப் பேச வேண்டியது இருக்கிறது.

11-55 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாலை 4 மணிக்குத் தொடங்கி இரவு 10 வரை அல்லது 12 மணி வரை பேசலாம். வேறு யாரையாவது உட்கார வைத்து விட்டு நான் அறையிலேயே இருப்பேன். அதைப் பற்றிப் பிரச்சினை இல்லை. எல்லோருமே முடிவுக்கு வந்து விட்டோம். இப்போது முடியுங்கள். மாலை பேசலாம்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : இதோடு முடித்துக் கொள்கிறேன். மாலை 15 நிமிடம் அதிகமாகக் கொடுக்க வேண்டும். ஏனென்றால் 2 கட்சிகள் வரவில்லை.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, வராத கட்சிக்கு என்று யாரும் பிரதிநிதி ஆக முடியாது. வராத கட்சி என்பது பொதுக் கணக்கே தவிர தனிப்பிரதிநிதித்துவம் யாருக்கும் வராது. இன்னும் சொல்லப் போனால் தீட்சிதர் அவர்கள் அந்தக் கட்சிக்கு பிரதிநிதியாக என்றைக்கும் வரமாட்டார்கள். (சிரிப்பு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஐயா முடித்தாகி விட்டதா ? பிறகு வாக்கியத்தை முடிக்கவில்லை என்று வருத்தப் படுவீர்களே.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : ஒரே ஒரு விஷயத்தை மட்டும் சொல்லி விடுகிறேன். மத்திய அரசின் இணை மந்திரியாக இருந்தார்களே, ப. சிதம்பரம், குட்டையாக இருப்பார், அவர் சொல்கிறார், தினமணியிலே வந்திருக்கிறது. அவர் சொல்லி விட்டாராம். இவர் எழுதி விட்டாராம். அவர் சொல்கிறார். நாட்டிலே புலிகளுடைய முகாம்கள் இருந்து கொண்டிருக்கின்றன. அதை நீங்களாக சரியான முறையிலே கண்டுபிடிக்கவில்லையென்றால் நான் கண்டுபிடித்து விடுவேன். எனக்குத் தெரியும் : அதை வெளியிட்டு விடுவேன் என்கிறார். யாராவது தடுத்துக் கொண்டிருக்கிறார்களா ? எந்தக் கட்சியாவது போய்த் தடுத்ததா? எனக்குத் தெரியும் எல்.டி.டி.ஈ. சமாச்சாரம் முழுவதும். நமது கலைஞர் 50 ஆயிரம் கொடுத்துக் கூட வேண்டாம் என்றார். ஆனால் எம்.ஜி.ஆர். 4 கோடி கொடுத்த போது அவர் வாங்கிக் கொண்டார். வாங்கிக் கொண்டாரா இல்லையா ? அதை ஒத்துக் கொள்ள முடியுமா ? (மணியடிக்கப்பெற்றது).

ஒரு முடிவுக்கு வரவேண்டும். அந்த பிரபாகரன் ஒரு தமிழன். ஏதோ சிங்களவனா அல்லது ஆப்பிரிக்க நீக்ரோவா அல்லது அமெரிக்க நீக்ரோவா அல்லது வேறே ஏதோ ஐரோப்பிய நாட்டிலிருந்து வந்தவரா ? அவரும் நம் தமிழன். சுதந்திரத்திற்காகப் போராடுகிறார். அவரை விடக் கூடாது, அவர் எங்கே இருக்கிறார் என்கிறார்கள். ஏதோ 2, 3 கொலை நடந்தது. ஏன் வேறு யாராவது செய்து விட்டு அவர் மேல் வைக்கக் கூடாதா ? மற்றவர்களிடம் துப்பாக்கி இல்லையா ? அவருக்கு எங்கிருந்து துப்பாக்கி கிடைத்தது என்கிறார்கள். ஏன் கண்டுபிடியுங்களேன். உல்ஃபாவுக்கு சப்ளை பண்ணப்படுகிறது என்கிறார்கள். அங்கே யாருடைய ஆட்சி நடக்கிறது ? மத்திய அரசு ஆட்சி நடக்கிறது. அதைத் தடுக்க முடியவில்லை. நமக்கு அதற்கு சக்தி இல்லை என்றால் அதைச் சொல்ல வேண்டும். ஐயா எங்களுக்கு சக்தி இல்லை, நாங்கள் மத்திய ஆட்சி நடத்துகிறோம், அஸாமிலே எங்களால் முடியவில்லை, பஞ்சாபிலே நடக்கிற அக்கிரமங்களைச் சகிக்க முடியவில்லை, ஒடுக்க முடியவில்லை, நாங்கள் ராஜினாமா செய்கிறோம் என்று சொல்லாமல், அவர்கள் இங்கே 1, 2-ஐக் கண்டு பிடித்து விட்டார்களாம். கண்டு பிடித்து விட்டு சொல்லவும் மாட்டேன் என்கிறார்கள். ஆனால் மிரட்டிக் கொண்டே இருக்கிறார்கள். இந்த மிரட்டலுக்கு வேறே இரண்டு கட்சிகள் உடந்தையாக இருந்து எல்லோரையும் சேர்த்து ஒரே மிரட்டலாக மிரட்டுகிறார்கள். ஆகையினால் இதற்கெல்லாம் ஒரு முடிவு கட்டுவதற்கு நம்முடைய சபையிலே உள்ள அத்தனை பேரும் ஒன்றாக இருக்க வேண்டும். ஒன்றிரண்டு போனாலும் கவலையில்லை, மற்றவர்கள் ஒன்றாக இருந்து முடிவு கட்ட வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடிக்கிறேன்.

திருமதி பொ. லட்சுமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கையில் பேச வாய்ப்பு அளித்தமைக்கு எனது முதற்கண் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனது வால்பாறை தொகுதி, மலைகள் சூழ்ந்த தொகுதி ஆகும். அங்கு காட்டு மிருகங்கள் அதிகமாக இருக்கின்றன. மேலும் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அடிக்கடி எனது தொகுதிப் பக்கம் சென்று அங்குள்ள வனச் சரணாலயங்களை எல்லாம் பார்த்திருக்கிறார்கள். அந்த வன மிருகங்களால் ஏற்படுகின்ற தொல்லைகளும் அவருக்கு நன்கு தெரியும்.

அந்தத் தொகுதியில் தேயிலைத் தோட்டங்களில் பணி புரிகின்ற தொழிலாளர்கள் அங்குள்ள தேயிலைத் தோட்ட நிர்வாகத்தவர்கள் ஒதுக்கித் தந்த இடங்களில் குடியிருந்து வருகிறார்கள். அந்தக் குடியிருப்புகள் நல்ல பாதுகாப்பற்ற நிலையில் இருப்பதினால் இரவு நேரங்களிலே வன மிருகங்கள் அந்தப் பகுதிகளுக்குச் சென்று அங்குள்ள மனிதர்களுக்கும், அவர்கள் வளர்க்கின்ற ஆடுமாடுகள் போன்ற மிருகங்களுக்கும் சேதங்களை உண்டாக்கி அவர்களுக்குப் பல இன்னல்களை தந்து